# தேசத் தந்தை காந்தி

MADURAI UNIVERSITY LIBRARY
MADURAI-2.

வீ. செல்வராஜ்

தமிழ் நாடு காந்தி நினைவு நிதி,
காந்தி நிலையம், மதுரை-13,

50 காசுகள்

MADURAI UNIVERSITY LIBRARY
MADURAI-2

# அடக்கம்

1. அன்பின் ஊழியத்தால் தந்தையானார் ... 1

2. கிராமவாசியாக எளிமையானார் ... 3

3. தீண்டாதவருக்குத் துணையானார் ... 4

4. பெண்களுக்கும் தந்தையானார் ... 6

5. விவசாயிகளுடன் இணைந்தார் ... 8

6. தொழிலாளர் உழைப்பை உயர்த்தினார் ... 10

7. ஆசிரியருக்கு இலக்கணமானார் ... 12

8. சர்வமதபோதகரானார் ... 15

9. இயற்கை வைத்தியரானார் ... 17

10. மாணவருக்கு வழிகாட்டியானார் ... 20

11. ஆன்மீகத்தந்தை காந்தி ... 22

12. ஆன்மீக அரசியல் தந்தை காந்தி ... 26

ஜவரி அச்சகம், 692/693, நெடுஞ் சாலை, சென்னை-5.

MADURAI UNIVERSITY LIBRARY MADURAI 2.

# 1. அன்பின் ஊழியத்தால் தந்தையானர்

''நாராயணுய நம'' என்பதற்குப் பதில் தம் நாட்டு மக்கள் ''இரணியாய நம'' என்று ஏற்கச் செய்ய முயன்று தோற்ருன் இரணியகசிபு. அவன் வழி யிலே தோன்றிய இட்லர் ஜெர்மானிய மக்கள் தம் மைத் தேசப்பிதாவாக ஏற்கச் செய்ய பாசிஸ வழிகளை மேற்கொண்டு இறுதியில் அழிந்தான். அதேபோல் தம் ரஷியாவின் தந்தையாகத் தம்மை ஆக்கிக் கொள்ளத் தம்மிடமிருந்த சர்வாதிகாரத்தை எல்லாம் பயன் படுத்தி ஸ்டாலின் இறுதியில் அவமானத்துக் காளானுன். இன்று சீனுவின் தந்தையாகத் தம்மை மதிக்குமாறு செய்ய மா சே துங் மக்களை அல்லோல கல்லோலப் படுத்தி அழிவுப்பாதையில் சென்று கொண்டிருக்கிருன்.

ஒருபுறம் சர்வாதிகாரிகள் தம்மைத் தேசத் தந்தையாக்கிக் கொள்ள வேண்டி படுகொலைகளை நிகழ்த்திக்கொண்டிருக்க, மற்ருெருபுறம் எந்தவித மான அதிகாரமும் இல்லாத ஒருவரை ''மகாத்மா'' என்றும் ''தேசப்பிதா'' என்றும் மக்கள் அன்புடன் போற்றுவதைக் காணுகிரேம்.

காந்தியடிகள் என்றும் தம்மை ஒரு சாதாரணத் தொண்டராகவே பாவித்தார். அதிகாரத்தால் அல்ல, அன்பினல் அவர் தேசத்தின் பிரதான ஊழியா என்ற தகுதி பெற்ருர். தேசீய வாழ்வின் சகல துறை

களிலும் அவர் பங்கு இருந்தது. குறிப்பாக சமுதாயத்தின் கீழ்மட்டத்திலிருந்த கடையருக்காக அவர் மனம் கசிந்தது. ஆகவே அவர் மகாத்மாவானார். தேசத்தின் இன்ப துன்பங்களுக்கெல்லாம் தம்மை ஆளாக்கி மக்களுக்கு வழிகாட்டி, தேசத்தின் பிதாவாகவும் ஆனார்.

★

## 2. கிராமவாசியாக எளிமையானர்

இந்த தேசம் கிராமங்களைப் பின்புலமாகக் கொண்டது. இதன் நாகரீகம் கிராமியம். காந்தி யடிகள் இதற்குச் சின்னமாக வாழ்ந்தார். அவர் ஆங்கிலக் கல்வி கற்றவர். இளமையில் மேற்கத்திய நாகரீகத்தில் மோகமுற்றிருந்தவர். ஆயினும் அவர் தமது சத்திய உபாசனையின் பயனாக பாரதப் பண் பாட்டுக்கே திரும்பினர். தமிழ்நாட்டு கிராமவா சியைப்போல் அவர் எளியவாழ்க்கை வாழ்ந்தாா. கிராமிய நாகரீகத்துக்கும் பாரதப் பண்புக்கும் இலக்கானர்.

கிராமவாசியைப்போல் குடிசையில் வாழ்ந்தார். உடலுழைப்பினை ஏற்றார். இதன் பயனாய் கதர் கிராமத் தொழில் இயக்கம் பிறந்தது. அவர் தங்கிய இடம் சேவா கிராமமாயிற்று. அவர் சென்ற இடம் தில்லி யாயினும் எளிமையாயிற்று. அவர் அடிச்சுவடு பதிந்த மண்ணிலே கிராமிய மணம் வீசிற்று. உடலுழைப்பின் மூலம் அவர் ஏற்ற உன்னத வாழ்க்கையால், கிராமிய வாழ்க்கையோடு ஒன்றிய பண்பாட்டால், தமது சிந்தனையாலும் பக்தியாலும் நடையுடையாலும் தோற்றத்தாலும் கூட கிராமங்கள் நிறைந்த இந்த தேசத்தின் பிதாவானர் காந்தியடிகள்.

# 3. தீண்டாதவருக்குத் துணையானர்

ஒரு குடும்பத்திலுள்ள எல்லோரையும் விட பலத்தில் மிக்கவர் தந்தை. ஆயினும் முதல் பங்கு தமக்கே என்று அவர் கோருவதில்லை. குடும்பத்தில் மிகவும் பலவீனராயுள்ள குழந்தைகள், நோயாளிகள், கிழவர்கள் முதலியோருக்கே அங்கே முதல் பங்கு. குடும்பத் தலைவரான தந்தையின் கவனம் கடையர் பால் செல்லுகிறது. கடையருக்கே கடைத்தேற்றம், இது குடும்பநியதி. இது தந்தையின் கடன்.

தேசத்தந்தை காந்தியடிகளின் கவனம் இந்திய சமுதாயத்தின் அடித்தளத்திலே அமிழ்ந்து கிடந்த அரிஜனங்கள் பால் சென்றதில் ஆச்சரியம் ஏதுமில்லை. தீண்டாமை விலக்கும் பணியை ஏற்ருர். அரிஜன இயக்கம் பிறந்தது. அரிஜனங்களுக்கென்றே இந்த சமுதாயம் ஒதுக்கி வைத்திருந்த துப்புரவுப் பணியை தாமே மனமுவந்து ஏற்ருர். தென்னுப்பிரிக்காவிலிருந்த சமயம் ஒரு அரிஜன குமாஸ்தாவை தம் வீட்டோடு வைத்துக் கொண்டார். ஆசிரமத்தில் அரிஜன குடும்பங்களையும் இணைத்து சமூக பகிஷ்காரத்துக்கும் ஆளானுர். தீண்டார்தார் வசிக்கும் சேரிகளில் தங்கு வதற்கும் தயாரானுர். அரிஜனங்கள் நுழைய அனு மதிக்காத ஆலயங்களில் அவர் நுழைந்ததில்லை. தோட்டி வேலை செய்வதை ஆசிரமத்தின் பணியாகச் செய்து அதை உயர்த்தினுர்.

இந்து சமுதாயத்திலிருந்து அரிஜனங்களைப் பிரிக்கும் பிரிட்டீஷாரின் அரசியல் சூட்சியை எதிர்த்து உண்ணுவிரதமிருந்து அரிஜனங்கள் பால் தேசத்தின் கவனத்தையும் கடமையையும் ஈர்த்தார். அதன் நேரடிப்பயனுக அரிஜன சேவா சங்கம் உதயமாயிற்று. இதற்கென்றே தேசமெங்கும் யாத்திரையாகச் சென்று நிதி வசூலித்தார்.

''நான் மீண்டும் பிறவி எடுப்பதானுல் தீண்டாத வனுகவே பிறக்க வேண்டும். அவர்களுக்கு இழைக்கப் பட்டுவரும் துன்பங்களையும் துயரங்களையும் அவர் களுடன் சேர்ந்து நானும் பகிர்ந்து கொள்ள வேண்டும்,'' என்று பிரார்த்தனை செய்யும் அளவிற்கு காந்தியடிகள் கடையர்பால் காட்டிய கருணையால் அவர் நம் குடும்பத் தலைவரானுர்; தேசத் தந்தை யாகும் உரிமை பெற்றுர்.

# 4. பெண்களுக்கும் தந்தையானர்

நமது தேசத்தில் பெண்களுக்கு இழைக்கப்பட்டு வரும் சமூக அநீதிகள் கொஞ்ச நஞ்சமன்று. காலக்கிரமத்தில் நீதிகளாகவே உருவமெடுக்கும் அளவிற்கு அவை நிலைத்து விட்டன. இயல்பால் மேன்மையும் உடலால் பலவீனமும் வாய்ந்த அன்பு மிக்க தாய்க் குலத்தை ஆண்கள் அடிமையாக்கி விட்ட தோடு, ஆண்கள் செய்யும் அக்கிரமங்களுக்கும் கூட பெண்களே குற்றவாளிகளாயினர்.

ஆணுக்கும் பெண்ணுக்கும் தந்தையாகும் ஒருவர் இந்த அநீதிகளைச் சகிக்க இயலுமா? ''ஆண்களுக்கு இல்லாத நிர்ப்பந்தம் எதுவும் பெண்களுக்கு இருக்கக் கூடாது,'' என்று காந்தியடிகள் கூறினார். அன்பின் அவதாரமாகப் பெண்களை மதித்தார். ''சத்தியா கிரகத்தைக் கண்டு பிடித்தபோதே பெண்களின் லட்சி யத்திற்கும் உதவியவனுனேன்'' என்று உணர்ந்தார்.

இளமைக்காலத்தில் அவர் அதிகார பாவனையுள்ள கணவராக இருந்தாலும் இறுதியில் கஸ்தூரிபா அம்மையாரின் சக ஊழியராகவே தம்மை ஆக்கிக் கொண்டார். குழந்தை மணத்தை எதிர்த்தார். பெண்களின் திருமண வயதை உயர்த்துவதற்கு ஆதர வளித்தார். வரதட்சிணை கோருவது அவமானம் என்றார். ஆபரணங்களுக்காகவும் அலங்காரத்துக் காகவும் பெண்கள் அடிமைகளாவதைக் கண்டித்தார். பர்தாமுறை மிருகத்தனமானது என்றார். இளம் வித

வைகள் மறுமணம் செய்வதை ஆசீர்வதித்தார். வழுக்கி விழுந்த பெண்கள் சார்பாக வறுமையையும் ஆண்களின் காமவெறியையும் சபித்தார். பெண் களுக்குச் சொத்துரிமை கோரினர். பலவந்தமாகக் கடத்திச் செல்லப்பட்ட அபலைப் பெண்களை சமுதாயம் மரியாதையுடன் வரவேற்க வேண்டும் என்று கோரினர்.

சத்தியத்தைக் காக்கும் ஆண்மையால் ஒரு பாதி யும் அதற்காக அவர் ஏற்ற அன்பு வழி என்னும் பெண் மையால் மறுபாதியுமாக காந்தியடிகள் அர்த்தநாரி யானர். ஆணும் பெண்ணும் நிறைந்த இந்த தேசத் தின் தந்தையுமானர்.

# 5. விவசாயிகளுடன் இணைந்தார்

எளிமையான வாழ்வையும் உடலுழைப்பையும் சர்வோதய லட்சியத்தையும் ஏற்ற காந்தியடிகளின் உலகத்துக்கு உணவூட்டும் கிராமத்து விவசாயிகளை இயல்பாகவே வரிந்தேற்றார். அவர் பிறப்பாலும் வளர்ப்பாலும் நகரவாசியாயினும் வாழ்க்கையாலும் லட்சியத்தாலும் கிராமவாசியானார்.

காந்தியடிகள் ''மகாத்மாவாகக் கருத்தரித்த'' காலத்தில் தென்னாப்பிரிக்காவில் உருவான போனிக்ஸ் பண்ணையில் தாமே விரும்பி ஒரு உழவரானார். இந்தியா திரும்பிய பின்னரும் விவசாயிகளோடு இணைந்தே வாழ்ந்தார். இந்தியாவில் அவர் செய்த முதல் சத்தியாகிரகம் சம்பாரண் சத்தியாகிரகம். அது விவசாயிகளுக்கு இழைத்த அநீதிகளை எதிர்த்துச்செய்த சத்தியாகிரகம். கங்கைக்கு வடக்கே வெகுதூரத்தில் இமயத்தின் அடிவாரத்தில் அனாதைகளாகக் கிடந்த சம்பாரண் விவசாயிகளைச் சந்தித்தபோது, ''அவர்களைச் சந்தித்தது கடவுளையும் சத்தியத்தையும் நேருக்குநேராகவே தரிசித்ததாகும் என்று கூறுவது எவ்விதத்திலும் மிகையாகாது,'' என்றும் ''சம்பாரண் விவசாயிகளைச் சந்தித்த அந்த நாள் என் வாழ்க்கையில் மறக்க முடியாத நாள். விவசாயிகளுக்கும் எனக்கும் அது மிகவும் முக்கியமான நாள்,'' என்றும் தமது சத்திய சோதனையில் பதிவு செய்தார்.

குஜராத்தில் நடைபெற்ற 'கேடா' சத்தியாகிரகம் விவசாயிகளிடமிருந்து நிலவரி வசூலித்த கொடுமையை எதிர்த்து நடைபெற்ற இயக்கமாகும். இவற்றின் பயனுக கிராமப் புனருத்தாரணவேலே தொடங்கிற்று. கிராம பஞ்சாயத்து இயக்கம் உருவாயிற்று. கதர் கிராமத் தொழில் இயக்கமும் விவசாயிகளுக்காகவே தொர்டங்கப் பெற்றது. ''கிராமத் தொழில்களின் அடித்தளம் விவசாயம்'' என்பதை அவர் கண்டார். இந்த அடிப்படையில் தோன்றியதுதான் ஆதாரக்கல்வி.

''உழவன் தான் உலகத்தின் தந்தை. கடவுள் தான் எல்லாவற்றையும் வழங்கும் தயாபரர் என்றுல் விவசாயிகளே அவருடைய கைகள்; விவசாயிகளின் நெற்றி வியர்வை நிலத்தில் விழப் பாடுபட்டிருப்பதை வைத்துத்தான் இதுவரை நாம் உயிரோடு வாழ்ந்து வந்திருக்கிறேம். அவர்களுக்கும் நாம் பட்டுள்ள இக் கடனேச் செலுத்த என்ன செய்யப்போகிறேம்?'' என்ற கேள்வியை இந்த தேசத்தின் முன்னே வைத்து நம்மைச் சிந்திக்கவும் செயலாற்றவும் செய்த தேசத் தந்தை காந்தியடிகள்.

# 6. தொழிலாளர் உழைப்பை உயர்த்தினர்

உணவை உற்பத்தி செய்யும் தொழிலாளர்கள் விவசாயிகள் என்றால், வாழ்க்கைக்கு அத்தியாவசியமான இதர வசதிகளைச் செய்து தரும் தொழிலாளர்களும் காந்தியடிகளின் அன்பிற்குப் பாத்திரரானார்கள். சபர்மதி ஆசிரமத்தில் இருந்தகாலத்தில் தினந்தோறும் 4 முதல் 5 மணி நேரம் நெசவு செய்தார். நேரம் கிடைத்த போதெல்லாம் நூல் நூற்றார். ராட்டையில் நூற்கும் போதெல்லாம் தொழிலாளர்களோடு இணைவதாகவே அவர் உணர்ந்தார். ''தென்னாப்பிரிக்காவுக்குப் போனது முதற்கொண்டே தொழிலாளர்களோடு எனக்கு நெருங்கிய தொடர்பு உண்டு,'' என்று கூறுகிறார்.

மூலதனம் எப்படி முக்கியமோ அதைவிட உழைப்பு அதிக முக்கியமானது என்பது காந்தியடிகளின் கருத்து. கூலி உயர்வு கோரி ஆமதாபாத் தொழிலாளர்கள் மேற்கொண்ட போராட்டத்துக்குத் தலைமை தாங்கி 22நாட்கள் உண்ணாவிரதமிருந்தார். ஆமதாபாத் தொழிலாளர்களுக்குத் தொழிற்சங்கம் அமைத்துக் கொடுத்தார். அச்சங்கம் தொழிற்சங்க இயக்கத்துக்கே வழிகாட்டியாயிற்று. அச்சங்கத்துக்கு சொந்தமான ஆஸ்பத்திரி உண்டு. அதுவே ஒரு பள்ளிக்கூடமும் நடத்துகிறது. அச்சுக்கூடம் உண்டு. குடியிருப்பு வீடுகளை அது உருவாக்கியுள்ளது. இதைப் பின்பற்றி இந்த தேசத்தில் முறையான தொழிற்சங்க இயக்கம் வலிமை பெறலாயிற்று.

தொழிலாளர் பிரச்சினை வெறும் சோற்றுப்பிரச்சினை மாத்திரமல்ல. அது சுயமரியாதைப் பிரச்சினை. ''உழைப்பை மதிக்காத கலாச்சாரம் வாந்தி எடுத்த தற்குச் சமம்''. ஒரு கணம் முதலாளிகளிடம் உள்ள மூலதனம் கூட தங்களிடமிருந்தே வந்தது என்பதை தொழிலாளர்கள் உணரவேண்டும். ஆயினும் அவர்கள் முதலாளித்துவத்தைச் சக்தியற்றதாக்கி விடுவதற்குப் பதிலாக அந்த மூலதனத்தைக் கைப்பற்றிக் கொண்டு தாமே முதலாளிகளாகிவிட விரும்புவதுதான் தொழிலாளர் இயக்கத்தின் தோல்விக்குக் காரணம். ஆகவே மூலதனத்துக்கும் உழைப்புக்கும் போர் அல்ல, விவாகம் ஆகிவிட வேண்டும்.

காந்தியடிகளின் இந்த அடிப்படைக்கருத்து தொழிலாளர்களுக்கு மாத்திரமல்ல முதலாளிகளுக்கும் இயல்பாகவே பொருந்தும். முதலாளிகள் தொழிற்சாலைகளின் தர்மகர்த்தாக்களாக உயர வேண்டும் என்று காந்தியடிகள் விரும்பினர். லாப நோக்குத்தான் எல்லாத் தொழில்களையும் மாசுபடுத்துகிறது. களங்கமற்ற அன்பு இருக்கிறதென்றால் சொத்துடமை உணர்வும் இருக்க முடியாது. இவ்வாறு தொழிலாளர், முதலாளி ஆகிய இருசாரார் கடமைகளையும் உணர்த்த வல்ல தொழிலாளர் தலைவராக காந்தியடிகள் இருசாராரின் அன்பையும் பெற்று தேசத்தின் தந்தையுமானர்.

# 7. ஆசிரியருக்கு இலக்கணமானர்

காந்தியடிகள் தமது இளமைப் பருவத்தில் பாரிஸ்டர் பட்டம் பெற்றும் அவருடைய சுபாவம் வக்கீல் தொழிலுக்குப் பொருந்தாத காரணத்தால் அதில் அவர் ஊன்ற முடியமாற் போயிற்று. ஆகவே அவர் ஆசிரியராகப் பணியாற்ற விரும்பி அவ்வேலைக்கு மனுச் செய்தார். ஆனால் அவர் பி. ஏ. பட்டம் பெற வில்லை என்ற காரணத்தால் அவர் மனு ஏற்றுக் கொள்ளப்படவில்லை. ஆயினும் அவர் பிற்காலத்தில் தென்னுப்பிரிக்காவில் இருந்த சமயம் டால்ஸ்டாய் பண்ணையில் சிறுவர்களுக்குப் பாடம் போதிக்கும் ஆசிரிய ராகவும் இருந்தார். அக்காலத்தில் அவர் பெற்ற அனுபவமே பின்னர் ஆதாரக் கல்வித்திட்டமாக உரு வாயிற்று என்று கூறவேண்டும்.

அக்காலத்தில் தாய்மொழி மூலம் கற்றுக் கொடுப் பதன் முக்கியத்துவத்தை உணர்ந்தார். அப்பண்ணையில் தமிழ்ச் சிறுவர்கள் இருந்தார்கள். அவர்களுக்குத் தமிழ் கற்றுத் தரும் பொறுப்பை அவரே ஏற்றார். பாடப் புத்தகங்களின் அவசியத்தை அவர் மிகைப்படுத்த வில்லை. ஏராளமான புத்தங்களைப் பிள்ளைகளின் மேல் சுமத்துவதை அவர் ஏற்கவில்லை. மாணவருக்கு உண்மையான பாடப்புத்தகம் ஆசிரியரே என்பது அவருடைய கருத்து.

டால்ஸ்டாய் பண்ணையில் எல்லோரும் உடல் உழைப்பில் ஈடுபட்டனர். இது அவர்களுக்கு உடற்

பயிற்சியாற்று. பல்வேறு தொழில்கள் செய்த பின்னர் கிடைக்கும் அவகாசத்தில் தான் இலக்கியக் கல்வி நடைபெற்றது. இது அவர்களுக்கு அறிவுப்பயிற்சி ஆயிற்று. தேகாப்பியாசங்கள் மூலம் உடற்பயிற்சியும், அறிவு அப்பியாசங்கள் மூலம் அறிவுப்பயிற்சியும் அளிக்க முடிவதைப்போல், ஆன்ம சாதனங்களினுலேயே ஆன்மப் பயிற்சி அளிக்க முடியும் என்பது காந்திடிகளின் கருத்து. ஆன்ம சாதனப்பயிற்சி முழுக்க முழுக்க ஆசிரியர்களின் வாழ்க்கையையும் ஒழுக்கத்தையும் பொறுத்தது என்பதை உணர்ந்தே அவர் ஆசிரியராகப் பணியாற்றினுர்.

''ஆசிரியர் பொய்யராக இருந்து கொண்டு உண்மை பேசும்படி மாணவர்களுக்குப் போதிப்பது வீண் வேலே. கோழையாக இருக்கும் ஒரு ஆசிரியர் மாணவர்களே வீரர்களாக்கி விட முடியாது. புலனடக்கம் என்பதே தெரியாத ஓர் ஆசிரியர் புலனடக்கத்தை மாணவர்களுக்குப் போதித்து விட முடியாது. ஆகவே என்னுடன் இருக்கும் குழந்தைகளுக்கு உதாரணப் பாடமாக இருக்க வேண்டும் என்பதைக் கண்டேன். டால்ஸ்டாய் பண்ணேயில் இருந்த போது எனக்கு நானே அதிகமாக விதித்துக் கொண்ட கட்டுதிட்டங்களும் புலனடக்கங்களும் பெரும்பாலும் என் பாதுகாப்பிலிருந்த குழந்தைகளுக்காகவே என்று சொல்லலாம்,'' என்று காந்தியடிகள் கூறுகிருர்.

இவ்வாறு காந்தியடிகள் ஆசிரியர் இலக்கணத்துக்கே சிறந்த உதாரணமானுர். இதன் பயனுக அவர் உருவாக்கிய ஆசிரமங்கள் ஒவ்வொன்றும் ஒரு வித்யா பீடமாயிற்று. தேசீயப் போராட்ட காலத்தில் தேசீயப் பாடசாலேகள் உருவாயிற்று. இறுதியில் உடலுழைப்

பும், உற்பத்தியும் இணைந்த தொழில் மூலம் கல்விதரும் தேசீயக்கல்வித்திட்டம் பிறந்தது. இதைத்தான் நாம் ஆதாரக்கல்வித் திட்டம் என்று அழைக்கிறோம். தேசத் தந்தை காந்தியடிகள் தேசீயக்கல்விக்கும் தந்தையானார்.

—o—

## 8. சர்வமத போதகரானர்

''உண்மையில் உலகில் மனிதர்கள் எத்தனையோ அத்தனை மதங்களும் இருக்கும். தேசிய உணர்வுள்ளவர்கள் மற்றவர்களின் மதக்கோட்பாடுகளில் குறுக்கிடுவதில்லை. இந்துக்களோ, பார்ஸிகளோ, கிறிஸ்தவர்களோ எல்லோரும் இந்நாட்டு மக்களே,'' என்று 1909-ம் ஆண்டிலேயே காந்தியடிகள் ''இந்திய சுயராஜ்யம்'' என்ற நூலில் எழுதியுள்ளார்.

1919-ம் ஆண்டில் கிலாஃபத் இயக்கத்தின் சமயம் காந்தியடிகள் இந்திய முஸ்லீம்களுடன் ஒத்துழைத்தார். காந்தியடிகளின் தலைமையில் நடைபெற்ற தேசியப் போராட்டத்தில் இந்திய முஸ்லீம்கள் ஒத்துழைத்தனர். கான் அப்துல் கபார்கான், அலி சகோதரர்கள், அபுல் கலாம் அசாத், அசப் அலி, டாக்டர் அன்சாரி, டாக்டர் கான்சாகிப் போன்ற முஸ்லீம் தலைவர்கள் தேசிய போராட்டத்தின் முன்னணியில் இருந்தவர்கள். அதேபோல் தீனபந்து ஆன்ட்ரூஸ், டாக்டர் குமரப்பா, திருமதி அமிர்த் கௌர், ஜார்ஜ் சோஸப் போன்ற பல கிறிஸ்தவத் தலைவர்களும் இடம் பெற்றனர். ஆகவே காந்தியடிகள் தேசியத் தலைவராக மதிக்கப்பட்டார்.

1924-ம் ஆண்டு இந்து-முஸ்லீம் ஒற்றுமை கோரி 21 நாட்கள் உண்ணாவிரதமிருந்தார். 1946-ல் இந்து-முஸ்லீம் ஒற்றுமையை வலியுறுத்தி கிழக்கு பாகிஸ்தானில் நௌகாலியில் யாத்திரை செய்தார். இந்த

யாத்திரை அடிகளின் வாழ்வில் முத்திரை பெற்று விட்டது. நாடு சுதந்திரம் பெற்ற 1947 ஆகஸ்டு 15-ம் நாள் சுதந்திர தினவிழாக் கொண்டாட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் காந்தியடிகள் கல்கத்தாவில் இந்து-முஸ்லீம் ஒற்றுமைக்காக உண்ணுவிரதமிருந்தார். இதனுல் இந்து-முஸ்லீம் ஒற்றுமை ஏற்பட்டு வகுப்புக் கலவரம் தணிந்தது. இதைப்பாராட்டி மேற்கு பஞ்சாப் அரசாங்கம் தந்தி மூலம் செய்தி அனுப்பிற்று. அப்போது கவர்னர் ஜனரலாக இருந்த லார்டு மௌன்ட் பாட்டன் காந்தியடிகளை ''தனி மனிதர் ராணுவம்'' (One-man army) என்ருர். ராணுவம் அடக்க முடியாத வகுப்புக்கலவரத்தை காந்தியடிகள் தமது அன்பின் வயப்பட்ட உண்ணுவிரதத்தால் நிறுத்தியதை அவர் அவ்வாறு குறிப்பிட்டார்.

இறுதியில் இந்து-முஸ்லீம் வகுப்பு ஒற்றுமைக்காக மேற்கொண்ட பணியிலேயே அவர் உயிர்நீத்தார் என்பதை உலகம் ஒப்புக்கொண்டது. மதம் தனிமனிதரின் உரிமை. தேசீய வாழ்வில் மதக்கோட்பாடுகள் குறுக்கிடக் காரணமில்லை. எல்லா மதங்களும் கடவுளைக் காட்டும் வழிகளே. காந்தியடிகளின் பிரார்த்தனையில் எல்லா மதங்களின் பாடல்களும் பிரார்த்தனைகளும் இடம் பெற்றன. இந்திய தேசீயத்தை உருவாக்கிய தேசத்தந்தை காந்தியடிகள் என்பதை நிரூபிக்க அவர் ஆற்றிய இந்து-முஸ்லீம் இணைப்புப் பணி நிதரிசனமாகும்.

# 9. இயற்கை வைத்தியரானர்

நோயாளிகளுக்குப் பணிவிடை செய்வதில் அக்கறை காந்தியடிகளுக்கு இயற்கை சுபாவமாகவே அமைந்திருந் தது. அவர் உயர்நிலைப்பள்ளி மாணவராக இருந்த காலத்தில் ''உடற்பயிற்சி வகுப்புக்குப் போக நான் விருப்பாததற்குக் காரணம் என் தந்தைக்குப் பணிவிடை செய்ய வேண்டும் என்று எனக்கிருந்த ஆர்வமேயாகும்'' என்கிருர். அப்போது அவர் தந்தை நோயாளியாக இருந்தார்.

அவர் லண்டனில் மாணவராக இருந்த காலத்தில் சைவ உணவுபற்றி ஆராய்ந்தார். தென்னுப்பிரிக்கா வில் இருந்த காலத்தில் தம் குடும்பத்தையே உலைக் களமாகக் கொண்டு இயற்கை வைத்தியத்தை ஆராய்ந் தார். தம்மிடம் உதவிக்கோரி வந்த ஒரு குஷ்ட ரோகிக்கு, ''ஒருவேளை உணவோடு அவரை அனுப்பி விட மனம் இல்லை. அவரை என் வீட்டிலேயே இருக் கச் செய்து அவருடைய புண்களுக்கு சிகிச்சை செய் தேன்'' என்று கூறினர். தமது வக்கீல் தொழில் சம்பந்தமான காரியாலய வேலைகளைச் சுருக்கிக் கொண்டு டாக்டர் பூத்தின் தரும வைத்திய சாலையில் தினமும் இரண்டு மணி நேரம் நர்சாகப் பணியாற்றி ஞர். ''இந்த ஊழியம் என் மனதிற்குச் சாந்தியை அளித்தது'' என்கிருர். நோயாளிகளுக்குப் பணிவிடை செய்யும் இந்த ஆர்வத்தின் காரணமாக அவர் போயர்

யுத்தத்தின் சமயம் நோயுற்றவர்களுக்கும் காயம் அடைந்தோருக்கும் உதவும் வைத்தியப்படையில் பணி யாற்றினர்.

பிரசவ சிகிச்சை சம்பந்தமாகத் தெரிய வேண்டிய வைகளை எல்லாம் காந்திஜி படித்துத் தெரிந்திருந்தார். கஸ்தூர்பாவின் பிரசவ சமயத்திலும் அதைத் தொடர்ந்து குழந்தையைப் பராமரிப்பதிலும் தாதிக் குப் பதிலாக அவரே உதவினர். கடைசிக் குழந்தை பிரசவத்தின் சமயம் வைத்திய உதவி கிடைக்காத காரணத்தால் அவரே பிரசவம் பார்த்து சுகப்பிரசவம் ஆகும்படி கவனித்துக் கொண்டார்.

அவருக்கே இயல்பான எளிய இயற்கை வாழ்க்கை முறை, நோயாளிகளுக்கு பணிவிடை செய்வதிலுள்ள ஆர்வம் புலனடக்கம் கிராமியப் பண்பு, ஆகியவற்றின் பயனுக அவருக்கு இயற்கை வைத்தியத்தில் ஆர்வம் உண்டாயிற்று. ‘இந்தியன் ஒப்பீனியன்’ என்ற தமது பத்திரிகையில் ‘ஆரோக்கிய வழி’ என்ற தலைப்பில் கட்டுரைகள் எழுதினர். இக்கட்டுரைகள் பின்னர் நூலாயிற்று. அவருடைய வாழ்க்கை முறையே இயற்கை வைத்திய முறையாக மாறிற்று. இந்தியாவின் கிராம வசதிகளுக்கான இயற்கை வைத்திய முறையை அவா ஆராய்ந்தார். இதன் பயனுக புனுவிலும் உருளிகாஞ்சனிலும் இயற்கை வைத்திய நிலையங்கள் உருவாயின.

பிரசஞ்சத்தின் சின்னஞ் சிறு வடிவமே மனித உடம்பு. அது மண், நீர், காற்று, சூரிய ஒளி, ஆகா யம் ஆகிய பஞ்சபூதங்களால் ஆக்கப்பட்டுள்ளது. அவற்றினிடமே சிகிச்சை முறைகளைக் கண்டறிய வேண் டும். உடம்பைப் பூரணமாக அறிந்தவர் பிரபஞ்சத்

தையும் அறிந்தவராகிருர். இந்த அடிப்படைக் கருத்தைக் கொண்டு தொடங்குவதுதான் இயற்கை வைத்தியம்.

கடையருக்கும் கடைத்தேற்றம் என்ற சர்வோதய பாவனையுள்ள காந்தியடிகள் "கிராமங்களே உண்மை இந்தியா ; என் இந்தியா, அதற்காகவே நான் வாழ்கிறேன். இந்த ஏழை மக்களிடம் பெரிய பட்டங்கள் பெற்ற டாக்டர்களையும் அவர்களுக்குரிய தடபுடல்களான சாதனங்களையும் கொண்டு செல்ல முடியாது. இயற்கையான சாதாரண பரிகாரங்களிலும், ராமநாமத்திலும் தான் அவர்களுடைய கதிமோட்சம் இருக்கிறது" என்று கூறும் கருணைமிக்க இயற்கை வைத்தியர் காந்தியடிகள். தந்தை உள்ளம் பொதிந்த தேசப்பிதாவாகும் தகுதியும் பெற்ருர்.

—o—

# 10. மாணவருக்கு வழிகாட்டியானர்

காந்தி உயர்தரப்பள்ளி மாணவராக இருந்த சமயம் காப்பியடிக்குமாறு ஆசிரியரே தூண்டிய சமயத்திலும் கூட அவ்வாறு தவறு செய்யவில்லை. அது மாத்திரமல்ல, அவ்வாறு தவறு செய்யத்தூண்டிய ஆசிரியரிடத்தில் அவர் கொண்டிருந்த மதிப்பைக் குறைத்துக் கொள்ளவில்லை. ''பெரியவர்களிடம் குறைகளைக் காண்பதில் குருடனுகவே இருந்து விடுவது என் சுபாவம்'' என்று இச்சம்பவம் பற்றிக் குறிப்பிடும் போது கூறுகிருர். இது ஒரு மாணவருக்கு இருக்க வேண்டிய சிறந்த இலக்கணமாகும். ஆசிரியரை மதிக்காத ஒரு மாணவர் அவரிடமிருந்து எதைக் கற்றுக் கொள்ள முடியும்?

பாடப்புத்தக அறிவிலும் விளையாட்டிலும் அவர் திறமையான மாணவர் என்ற பெயர் பெருவிட்டாலும் உண்மை பேசுவதில் அவர் தவறியதில்லை. தவறு செய்த போதும் அதை ஒப்புக்கொண்டு மனம் வருந்தியிருக்கிருர். ஒருமுறை பொய் சொன்னதாகத் தண்டிக்கப்பட்டார். உண்மையில் அவர் பொய் சொல்லவில்லை. அதற்காக மன வேதனையுற்ருர். ''உண்மையுள்ளவன் எச்சரிக்கையாகவும் இருக்க வேண்டும்,'' என்ற சிறந்த பாடத்தைக் காந்தியடிகள் மாணவப் பருவத்திலேயே அறிந்தார்.

மாணவப்பருவத்திலேயே அவருக்கு மணமாயிற்று. கெட்ட நண்பர்களின் பழக்கத்தால் புலாலுண்ணல்,

புகைபிடித்தல், திருடுதல் போன்ற தீய பழக்கங்களுக்கு ஆளானூர். லண்டனில் படித்துக்கொண்டிருந்த காலத்தில் ஆங்கிலக் கனவானுக வேண்டும் என்ற ஆடம்பர மோகத்தால் பணச்செலவும் காலவிரையமும் ஆயிற்று. அதனுல் மணமாகாதவரைப்போலவும் நடிக்க நேர்ந்தது. ஆயினும் அவரிடமிருந்த சத்திய உபாசனை அவருடைய தவறுகள் எல்லாவற்றிலுமிருந்தும் அவரைக் காத்து மீட்டியது. மாணவர் பருவத்தில் அவர் கூச்சமுள்ளவராயிருந்தார். ஆனுல் அக் கூச்சமே தம்மைப் பல தவறுகளிலிருந்து காத்ததாகக் கூறுகிருர்.

பொய்யான ஆடம்பரத்தையும், அடிமையில் மோகத்தையும், ஆண்மையற்ற ஆங்கிலக் கல்வியையும் அவர் ஆதிமுதல் எதிர்த்து வந்தார். ''நம் அறிவை வளர்ப்பது ஆங்கிலக்கல்வி என்பதுதான் நம்நாட்டிலுள்ள மூடநம்பிக்கைகள் எல்லாவற்றையும் விடப் பெரிய மூடநம்பிக்கை என்று கூறியுள்ளார்.''

நமது மாணவர்களைச் சுயநம்பிக்கை உள்ளவர்களாகவும் ஒழுக்கமுள்ளவர்களாகவும் செய்யவல்லது தாய்மொழிமூலம் கற்றுத்தரப்படும் தொழில் அனுபவத்தோடு பெறும் தேசீயக்கல்வி என்பதை அவர் வலியுறுத்தினூர்.

காந்தியடிகள் ஆசிரியர்களுக்கு மாத்திரமல்ல, சத்திய உபாசனைமூலம் மாணவர்களுக்கும் இலக்கணமானூர். அவரை மாணவர்கள் நேசித்தார்கள். மாணவர்களை அவர் நேசித்தார். அவர் மாணவர்களுக்குச் செய்த உபதேசம் ஒரு தனி நூலாகவே உருவாகியது. கல்வித் துறையிலும் அரசியல் துறையிலும் அவர் ஆற்றிய தொண்டு மாணவர்களுக்கும் உதவிற்று. தேசத் தந்தை மாணவர் சமுதாயத்தின் தந்தையுமானூர்.

## 11. ஆன்மீகத் தந்தை காந்தி

காந்தியின் பெற்ருேர் மத வைராக்கிய முள்ளவர்கள். அவருடைய தாய் விரதங்கள் அனுஷ்டிப்பதில் தீவிர பக்தியுள்ளவர். காந்தி தமது பெற்ருேர்களுடன் குழந்தைப்பருவத்தில் கோவில்களுக்குப் போவதுண்டு. ஆயினும் கோயில்களில் பெறமுடியாததை அவருக்கு அவருடைய செவிலித்தாய் தந்தார். அந்த செவிலித்தாய் மூலம் ராமநாம நம்பிக்கை காந்தியின் உள்ளத்தில் நீங்காத முத்திரையைப் பெற்று விட்டது.

காந்தியின் குடும்பம் தீவிர வைணவக் குடும்பமாயினும் அவர்கள் சிவன் கோவிலுக்கும் போவதுண்டு. அக்குடும்பத்தோடு நெருங்கிய உறவுடைய முஸ்லீம் மௌல்விகளும் பார்ஸி நண்பர்களும் உண்டு. இதனுல் காந்திக்கு அவருடைய குழந்தைப் பருவமுதலே சர்வ மத சமரச பாவனை கிடைத்தது. பின்னர் இங்கிலாந்தில் மாணவராக இருந்த காலத்தில் கிருஸ்தவர்களோடு தொடர்புகொண்டு அம்மதத்தை அறியும் வாய்ப்பினைப் பெற்ருர். தென்னுப்பிரிக்காவிலும் கிறிஸ்தவ மத ஆராய்ச்சி தொடர்ந்தது. அவர் தம் பொது வாழ்வில் பல்வேறு மதத்தைச் சேர்ந்த தலைவர்களோடும் மக்களோடும் தொடர்புகொள்ளும் வாய்ப்பு ஏராளமாகக் கிடைத்தது. ஆகவே தமது இயல்பாலும் அறிவுபூர்வமான ஆராய்ச்சியாலும், அனுபவத்தாலும் சர்வமத சமரச பக்தியை அவர் ஏற்ருர். இதனுல்' பல்வேறு சமயங்களுக்கும் இருப்பிடமான இந்தியாவின் ஏகமனதான தந்தையுமானுர்.

காந்தியடிகளின் ஆன்மீக வாழ்வில் கர்மவேதாந்தியான ராய்ச்சந்திரர், உடலுழைப்பை யக்ஞமாக்கிய ஜான் ரஷ்கின், கிராமீய நாகரீகத்தின் நுணுக்கமான எளிய வாழ்வு உன்னத சிந்தனைக்குச் சின்னமான லியோடால்ஸ்டாய் ஆகிய மூவரும் நீங்காத இடம் பெற்றிருப்பதைக் காந்தியடிகளின் சத்தியசோதனை என்னும் சுயசரிதம் வெளிப்படுத்துகிறது. இம்மூன்று பெரியார்களின் ஆன்மீகத்தொடர்பால் பிரம்மச்சரியம், புலனடக்கம், எளியவாழ்க்கை காந்தியடிகளுக்குக் கைவந்தது. இதனால் காந்தியடிகள் நின்ற இடமெல்லாம், சென்ற இடமெல்லாம் புனிதமான ஆசிரமமாயிற்று.

பொங்கு பல சமயங்கள் எல்லாம் சங்கமமாகும் இடம் சத்தியம் என்பதைக் காந்தியடிகள் அறிந்து, அனுபவித்து அதில் கைவல்யமானது நம் பாரதத்தின் பூர்வ புண்ணியமேயாகும். இறுதியில் சத்தியமே கடவுள் என்பதைக் கண்டார். சத்திய உபாசகரானார். சத்தியத்தைக் கண்டடைவதே வாழ்வின் சாபல்யம் என்பதை உணர்ந்தார். அவருடைய வாழ்க்கை சத்திய சோதனையாயிற்று.

பாரதத்தின் இயல்பு இரக்கமும் சகிப்பும் ஆகும். அதன் வழி அன்பு வழி. பாரதமண்ணின் ஆன்மீக இயல்பைப்பெற்ற காந்தியடிகள் அன்பு வழியை ஏற்றதில் வியப்பேதுமில்லை. இந்தியாவின் மண்ணிலே மிதித்த சகல மதங்களையும், அரசியல் ஆக்கிரமிப்புகளையும் தம்முள்ளே அன்பினாலும் சகிப்பினாலும் அடக்கித் தம்முடைய தாக்கிக் கொண்ட இந்தியப் பண்பாட்டுக்கு காந்தியடிகள் பாத்திரரானார். அன்பு வழியிலே சத்தியத்தைத் தேடிய ஒரு மகரிஷியானார்.

அன்புவழியில் மாத்திரமே சத்தியத்தைத் தரிசிக்க முடியுமென்றும் வேறு வழியிலே சத்தியம் போலத் தோன்றும் எதுவும் நான் என்னும் அகங்காரமே தவிர அது சத்தியனமாகாது என்றும் அவர் கண்ட வேத ரகசியத்தை அவர் தம் வாழ்வின் சோதனைகளால் உலகிற்கு வெளிப்படுத்தினர். நான் என்றும் அகங்காரம் நீங்கும் போது சட்டெனப் பணிவு தோன்றுகிறது; அன்புவழி புலனுகிறது; சத்தியவழி தென்படுகிறது. சத்தியவழி சென்ற காந்தியடிகள் அதற்கே உரியவாறு அச்சம் தவிர்த்தார், மக்கள் பணிக்குத் தம்மை அர்ப்பணித்தார்; பணிவிலே தாழ்ந்து உயர்ந்தார்.

பாரதத்தின் மேல்த்தளத்திலே தோன்றுவன மதச் சடங்குகளாயினும் அதன் அடித்தளத்திலே உயிரோட்டமாக இயங்கிக் கொண்டிருப்பது சகல சமயங்களுக்கும் முடிவான ஆன்மீக உறவாகும். இந்த தேசத்தின் சாதாரண மக்களிடத்திலும் இந்த ஆன்மீகப் பாவனை ஊடுறுவியிருப்பதை அறியலாம். இந்த ஆன்மீக உறவுக்கு காந்தியடிகள் உள்ளும் புறமும் உரியதொரு சின்னமானுர். அவர் மதச்சடங்குகளைப் பழகவில்லையாயிலும் அவற்றைப் புறக்கணிக்கவில்லை. அவற்றில் அவர் மயங்கவில்லையாயிலும் அவற்றை அவர் அவமதிக்கவில்லை. இவற்றுக்கெல்லாம் ஆதாரபீடமான ஆன்மீக ஒருமைப்பாட்டினை அவர் மதித்தார். மதங்களின் காலம்மனறந்து ஆன்மீகம் மலரும் காலம் வந்துவிட்டது என்றும், அரசியல் கட்சிகளின் காலம் அஸ்தமித்துத் விஞ்ஞானத்தின் காலம் விழிப்படைந்து விட்டது என்றும் விஞேபா அடிகள் இன்றும் பரைசாற்றுகிருர். இதற்குரிய அனுபவ இலக்கியக் காந்தியடிகள் என்ருல் அது மிகையாகாது.

சகல மதங்களுக்கும் இடம் தந்து உபசரித்து அவற்றின் சாரத்தைப் பிழிந்து எடுத்துக் கொண்ட ஆற்றல் பாரதத்துக்கு வேதகாலந் தொட்டே இருந்து வருகிறது. இந்த ஆற்றல் பாரதத்தின் ஆன்மீக ஒருமைப் பாட்டினுல் கிடைத்த ஆஸ்தியாகும். பாரம்பரியமான இந்த ஆஸ்திக்குள்ள உரிமையை உணர்த்திய ஆன்மீகத் தந்தை காந்தியடிகள் என்ருல் யாரே மறுக்கவல்லார்?

★

## 12. ஆன்மீக அரசியல் தந்தை காந்தி

அரிஸ்டாட்டில், பிளேட்டோ, சாணக்கியர், மாக்ய வல்லி போன்ற அரசியல் அறிஞர்கள் வழியில் வந்தவரல்ல காந்தியடிகள். அரசியலுக்கும் ஆன்மீகத்துக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்பதைக் காந்தியடிகள் ஒப்புக் கொண்டதில்லை. திருவள்ளுவரும் கூட அரசியலை அறத்துப்பாலிலிருந்து ஒதுக்கிப் பொருட்பாலில் சேர்த்தார். காந்தியடிகளோ ஆன்மீக அரசியல் வாதி. ஏமாற்றுக்காரர்களின் கடைசிப்புகலிடம் அரசியல் துறை என்று அவதூறு அரசியலுக்கு உண்டு. இந்த அவதூறை அகற்றி அதிலே ஆன்மீக ஒழுக்கத்தைப் புகுத்திய பெருமை காந்தியடிகளையே சாரும். ஆகவே காந்தியடிகள் உலகம் வியக்கும் ஆன்மீக அரசியல் தந்தையாவார்.

அரசியல் துறை ஏமாற்றுக்காரர்களின் இருப்பிடமானல் மக்கள் ஏன் அதற்கு மதிப்பளிக்க வேண்டும்? அரசியல் கல்வி அறிவூட்டும் பல்கலைக்கழகங்களில் ஏன் இடம் பெறவேண்டும்? பள்ளிகள்தோறும் குடிமைப் பயிற்சி தரவேண்டுவதேன்? உண்மையில் மனிதர் உறவை ஒழுங்குபடுத்துவது அரசியல். தனித்தனி மனிதரை சமுதாயமாக இணைத்து, மனித சமுதாயத்தை உயர்த்துவது அரசியல். ஒவ்வொரு கோவிலும் ஆன்மீகப் பள்ளியானல் ஒவ்வொரு குடும்பமும் ஆன்மீக அரசியல் பள்ளியாகும். ஆகவே கர்மயோகியும் சத்திய உபாசகருமான காந்தியடிகள் அரசியலில்

ஆன்மீக உறவைக் கண்டார்; சத்தியத்தைத் தேடினர்; அன்பைப் பாய்ச்சினர்.

ஒரே மனிதர் ஆன்மீகத் துறையில் ஒரு விதமாகவும் அரசியல் துறையில் வேறுவிதமாகவும் இரட்டை மனிதராக நடமாடுவது நியாயமா? பூஜை அறையில் ஆன்மீகவாதியாகவும் வியாபாரச் சந்தையில் கொள்ளை லாபக்காரராகவும் இருப்பவர் இருதுறைகளுக்குமே துரோகியாகிறார். இம்மாதிரியான இரட்டை வாழ்வைக் காந்தியடிகள் ஏற்றுக்கொள்ள மறுத்தார். உள்ளும் புறமும் ஒரேதரமான சத்திய சீலரான காந்தியடிகள் ஆன்மீகத்துறை வேறு, அரசியல் துறை வேறு என்று பிரித்துக் காணவில்லை. ஆன்மீகம் என்னும் போது எவரும் மதபேதமுள்ள சடங்காச்சாரங்களை இங்கு இணைக்க வேண்டாம். சகல மதங்களுக்கும் அடித்தளத்தில் ஒன்றியுள்ள ஆதார சக்தியே ஆன்மீக உறவாகும்.

காந்தியடிகள் மக்கள் சமுதாயத்தினின்றும் ஒதுங்கி வாழ விரும்பிய ஆன்மீக வாதியல்ல. மக்கள் மத்தியிலே ஆண்டவனைத் தரிசிக்க விரும்பியவர். மக்கட் பணியே இறைபணி என்று கண்டவர். சத்திய சொரூபியான ஆண்டவன் இல்லாத இடமேது, துறையேது? சத்திய சோதனை செய்த காந்தியடிகளின் வாழ்க்கையில் அரசியல் துறையும் குறுக்கிட்டதில் வியப்பில்லை. அவருடைய புனிதயாத்திரையில் அரசியல் துறைக்கும் இடம் கிடைத்தது.

காந்தியடிகளின் அரசியலில் ஆட்சி மிகக் குறைவாகவே இருக்கமுடியும். இதை அவர் பரவல்முறை ஆட்சி என்றார். ஆட்சி ஒரே இடத்தில் குவிந்திருப்பது தான் பலாத்காரத்துக்கும் கட்சிக்கும் சிக்கலுக்

கும் இடமளிக்கிறது. காந்தியடிகளின் லட்சிய சமுதாயமான சர்வோதய சமுதாயத்தில் ஆட்சியே இராது. ஆட்சியற்ற சமுதாயமாக இருக்கும். ஒவ்வொரு குடிமகனும் கடமையை வலியுறுத்துபவராக இருப்பார். உரிமைப் போராட்டத்துக்கு அங்கே வாய்ப்பு இல்லை. உரிமை என்பது நிறைவேற்றப்பட்ட கடமையினின்றும் உண்டாவதாகும்.

நல்லதொரு லட்சியத்தையுடைய நல்லாட்சியை தீயவழியிலே பெறமுடியாது. அதை நல்ல வழியில் தான் கண்டடைய முடியும். ஆகவே லட்சியத்தைப் போல் வழியும் உன்னதமாக இருக்க வேண்டும் என்று காந்தியடிகள் வலியுறுத்தினுர். சத்தியத்தைக் காண ஒரே வழி அன்புதான். அரசியலில் அஹிம்சை வழி நின்றவர் காந்தியடிகள். அந்நிய ஆதிக்கத்தின் கொடுங்கோலாட்சியை எதிர்க்க அவர் சத்தியாகிரகம் என்னும் அஹிம்சைவழிப் போராட்டத்தை ஏற்ருர். அதிலே ஒளிவுமறைவு இல்லை; சூட்சி இல்லை; பலாத்காரம் இல்லை; வெறுப்பும் பகையும் இல்லை. அன்பும் அச்சமின்மையுமே இருந்தது. போராட்டத்திலும் ஆன்மீக ஒழுக்கத்தினின்றும் காந்தியடிகள் வழுவியதில்லை. இதனுல் இதற்கு முன்னர் உலகம் கண்டிராத அளவிற்கு அவர் ஆன்மீக அரசியலில் உயர்ந்தார்.

காந்தியடிகள் விரும்பிய சுயராஜ்யம் தர்மராஜ்யம்; ராமராஜ்யம்; கிராமிய நாகரீகமும் பண்பும் ஆன்மீக ஒழுக்கமும் நிறைந்த கிராமராஜ்யம். அதுவே மக்கள் சுயராஜ்யம். மக்கள் சுயராஜ்யம் ஒவ்வொரு மனிதரும் தமது குடியுரிமையின் காரணமாகக் கடமை செய்வதை வலியுறுத்துவதாகும். அங்கு பொருளாதார சமுதாய ஏற்றத்தாழ்வுக்கு இடமில்லை. ஒவ்

வொரு மனிதரும் விடுதலை பெற்ற சுயராஜ்யத்தை காந்தியடிகள் காணவேண்டி அரசியல் துறையிலே தலைமை தாங்கினர். அவருடைய அரசியல்துறை சாதனைகள் உலக பிரசித்தி பெற்றவை. என்றும் அழியாத ஆன்மீகக் கருவூலங்கள். ஆகவே காந்தியடிகள் இந்தியாவுக்கு மாத்திரமல்ல, உலகிற்கே ஆன்மீக அரசியல் தந்தையாகிறார்.

MADURAI UNIVERSITY LIBRARY.
MADURAI-2

100402